பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 29 ஞாயிற்றுக்கிழமை (11-04-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர்135

# இடைக்காட்டில் இராணுவம் முன்னேறும் முயற்சி முறியடிப்பு

## புக்காரா மற்றும் ஷெல் தாக்குதல்களில் மூவர் பலி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 11

"புக்காரா" விமானம், ஹெலிகள் மற்றும் பொம்மர்களின் உதவியுடன் நேற்று இடைக்காட்டில் இருந்து முன்னேற பெரும் எடுப்பில் ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொண்ட முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது. படையினரின் நடவடிக்கைகளின்போது மேற்கொள்ளப்பட்ட புக்காரா தாக்குதல் மற்றும் ஷெல் வீச்சுகளினால அப்பாவிப் பொதுமக்கள் மூவர் உயிரிழந்தனர். நான்கு பேர் வரை காயமடைந்தனர்.

இடைக்காட்டுப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த காவல் அரண்களில் இருந்தே நேற்றுக் காலை 6-30 மணியளவில் படையினர் முன்னேற முயன்றனர். படையினர் ஆறு கவச வாகனங்களையும் பயன்படுத்தினர்.

முன்னேற முயன்ற இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர்.

இராணுவத்தினருக்கு உதவியாக ஒரு புக்காரா விமானம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

கடமையில் ஈடுபட்டிருந்த

## செஞ்சிலுவை அதிகாரி பலி; புக்காராவின் தாக்குதலில்!

### வாகனமும் சேதம்; அச்சுவேலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 11

நேற்று இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளில் சிக்கி காயமடைந்த பொதுமக்களை மீட்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரும் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளையின் உபதலைவர் கந்தையா புவனேந்திரன் (வயது 44) புக்காரா விமானத்தின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

அச்சுவேலிப் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

53 ஸ்ரீ 5009 இலக்கமுடைய — புதிய — அம்புலன்ஸில் செஞ்சிலுவைத் தொண்டர்களுடன் இவர் பயணம்செய்து கொண்டிருந்த சமயம் அச்சுவேலிப் பகுதியில் அச்சுவேலி பஸ்நிலையத்துக்குச் சமீபமாக வைத்து இத்தாக்குதல் இடம்பெற்றது.

அச்சுவேலிப் பகுதியில் காயமுற்ற பொதுமக்களை ஏற்றி வந்து, யாழ். ஆஸ்பத்திரியில் சேர்த்தபின்னர் மீண்டும் அச்சுவேலிப் பகுதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது அம்புலன்ஸ் வண்டி தாக்குதலுக்கு உள்ளானது.

#### உரிய விதிப்படி விலகி நின்றனர்

அப்பகுதியில் ஹெலி, புக்காரா விமானம் ஆகியவை வட்டமிட்டதைக் கண்ட திரு. புவனேந்திரனும் மற்றைய செஞ்சிலுவைச் சங்கத் தொண்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வல்லைப் பாலம் சேதம்: ஒருவர் பலி; மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 11

நேற்று நண்பகல் வலிகிழக்கில் முன்னேற முயன்ற இராணுவத்தினர் தம்பாலைப் பகுதியிலிருந்து நடத்திய ஷெல், மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் வல்லைப்பாலம் சேதமடைந்தது.

வல்லைப் பாலத்தினால் பயணம் செய்துகொண்டிருந்த வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார். பயணிகள் உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த — 60 வயது மதிக்கத்தக்க — வயோதிபர் ஒருவரே வல்லைப் பாலப் பகுதியில் உயிரிழந்தவராவார்.

அவரின் சடலம் அடையாளம் காணப்படுவதற்காக யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வல்லைவெளிப் பகுதியில் நடப்பட்ட மரங்களுக்கு நீர் ஊற்றிக்கொண்டிருந்த எஸ். ஜெயராசா (வயது 42 — கரவெட்டி மேற்கு), சி. சின்னக்குட்டி (வயது 67 — புறாப்பொறுக்கி), ஆ. இராகுலதாஸ் (வயது 21 — கல்லுவம், கரணவாய்) ஆகியோர் படுகாயமுற்றனர். அவர்கள் ஆபத்தான நிலையில் மந்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பலும் நாளை பருத்தித்துறைக்கு வரும்!

யாழ்ப்பாணம், ஏப். 11

திருகோணமலையில் இருந்து புறப்பட்டு நாளை பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படும் 'குமாரி' கப்பலுடன் 'நகர' கப்பலும் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருகோணமலை பிரிமா ஆலையில் இருந்து மா ஏற்றிக்கொண்டு 'குமாரி' கப்பலும், 150 பயணிகளுடன் நகர கப்பலும் பருத்தித்துறைக்கு நாளை வந்து சேரும் என கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு யாழ். அரச அதிபர் தகவல் அனுப்பியிருக்கிறார்

புத்தாண்டுக்கு யாழ்ப்பாணம் வரும் மக்களின் வசதி கருதி யாழ். அரச அதிபரின் முயற்சியினால் 'நகர' பயணிகள் கப்பல் ஒழுங்கு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தத் தடவை 'நகர' கப்பல் பருத்தித்துறைக்கு வந்து திரும்பிய பின்னர்—

அது தொடர்ந்து பருத்தித்துறைக்கு பயணிகளை ஏற்றி வரும் சேவையில் ஈடுபடுமா [illegible] இங்கு [illegible]

(உ-3)

## கம்பர்மலையில் நேற்று ஷெல்லுக்கு மாணவன் பலி!

வல்வெட்டித்துறை, ஏப். 11

நேற்று பலாலி இராணுவ முகாம் பகுதியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் வடமராட்சிப் பகுதியில் பல இடங்களிலும் பரவலாக விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கம்பர்மலை சோதம்பை என்ற இடத்தில் விழுந்து வெடித்த ஷெல்லினால், கம்பர்மலை அரசினர் பாடசாலையைச் சேர்ந்த மாணவனான முருகதாஸ் யோகதர்ஷன் (வயது 15) தலைசிதறிப் பலியானான்.

மேலும் பல ஷெல்கள் மண்டான், கரணவாய், வல்லைவெளி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, இமையாணன், சோழங்கன், தொண்டமானாறு ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்தன.

(உ-155-118)

## விமானக் குண்டு வீச்சினால் பாடசாலை ஒன்றும் சேதம்

யாழ்ப்பாணம், ஏப். 11

நேற்று படையினரின் முன்னேறும் முயற்சி முறியடிக்கப்பட்டதை அடுத்து, பிற்பகல் 2-30 மணியளவில் அச்சுவேலியை அண்டிய பகுதிகளில் இரண்டு பொம்மர்கள் கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

பத்தைமேனிப் பகுதியில் வீசப்பட்ட குண்டினால் இரத்தினேஸ்வரி வித்தியாலயத்தின் ஒரு பகுதியும் ஒரு வீடும் பெரும் சேதமடைந்தன.

தென்மூலைப் பகுதியில் வீசப்பட்ட குண்டுகளினால் மூன்று வீடுகள் சேதமடைந்தன.

இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல்களினாலும், கவச வாகனங்களினால் இடித்துத் தள்ளப்பட்டதாலும் தம்பாலைப் பகுதியில் மூன்று வீடுகள் சேதமடைந்தன.

[உ-15]

## 2,000 குடும்பங்கள் இடம்பெயர்ந்தன

இடைக்காட்டில் நேற்று படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளை அடுத்து பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்தனர்.

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு, நாவற்காடு, கலட்டி, அச்சுவேலி மத்தி, தோப்பு, பத்தைமேனி, தம்பாலை, கதிரிப்பாய் ஆகிய பகுதிகளில் இருந்து காலை முதல் மக்கள் இடம்பெயர்ந்தனர்.

இப் பகுதிகளில் இருந்து சுமார் இரண்டாயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக மதிப்பிடப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்கள் ஆவரங்கால், புத்தூர் ஆகிய இடங்களில் பாடசாலைகளிலும், வீதிவோரங்களிலும் நேற்றுப் பகல் தங்கியிருக்கக் காணப்பட்டனர்.

புத்தூர் சோமஸ்கந்தா ம. வியில் தற்காலிக அகதி முகாம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

நேற்று மாலையில் நிலைமை சீரடைந்ததை அடுத்து இடம்பெயர்ந்தவர்களில் கணிசமானோர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பினர்.

[உ-5-11-15-163-155]

## யாழ். புதிய பஸ் நிலையம் ஸ்ரான்லி வீதியில் இயங்கும்

### சித்திரை புத்தாண்டு முதல்

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ். பஸ்நிலையம் எதிர்வரும் புத்தாண்டு தினமான 14 ஆம் திகதி தொடக்கம் யாழ். ஸ்ரான்லி வீதியில் புதிய இடத்தில் இயங்கவுள்ளது.

இதுசம்பந்தமான உத்தியோகபூர்வ அறிவிப்பை நேற்றுமாலை கோண்டாவிலில் உள்ள மாவட்டச் செயலகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் வைத்து யாழ். மாநகர ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் வெளியிட்டார்.

யாழ். ஸ்ரான்லி வீதியில்— யாழ். ரயில் நிலையத்துக்குப் பின்பாக—ரயில் நிலைய விடுதி அமைந்துள்ள பகுதியில் புதிய பஸ்நிலையம் இயங்கவுள்ளது.

குடாநாட்டின் சகலபகுதிகளில் இருந்தும் வரும் பயணிகள் வாகனங்களும் எதிர்வரும் 14 ஆம் திகதி காலை முதல் இந்தப் புதியஇடத்தில் வந்து தரிக்கும் என்றும் அங்கிருந்தே சேவைகளை ஆரம்பிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரிக்கு அருகில் இப்போது இயங்கும் பஸ்நிலையப் பகுதியில் இதுவரை செயற்பட்டுவந்த ரிக்கற் பதிவு நிலையம் உட்பட சகல நடவடிக்கைகளும் இனிமேல் புதிய பஸ்நிலையப் பகுதியிலேயே இயங்கும்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள பஸ் நிலையப் பகுதியில் வர்த்தக நிலையங்களை

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் தேவை

மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் க. பொ. த (சாதாரண/ உயர்தர) மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க கணித/விஞ்ஞான/ஆங்கில/வர்த்தக ஆசிரியர்கள் தேவை. விரும்புவோர் தமது தகுதி, அனுபவம் என்பனவற்றை வெளிப்படுத்தி, தாம் பணியாற்ற விரும்பும் மாவட்டத்தையும், கற்பிக்கவிரும்பும் பாடத்தையும் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு 20-04-93 க்கு முன் விண்ணப்பிக்கவும். தங்குமிடவசதி, போக்குவரத்து இலவசமாக ஏற்பாடு செய்யப்படும். வேதனம் நேரில் கலந்துபேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**பொறுப்பாளர்,**
தமிழீழக் கல்விக் கழகம்,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(25206)

# நன்றி கூறுகிறோம்

**யா / உடுவில்**
**அ. மி. த. க பாடசாலை, சுன்னாகம்**

07 - 04 - 1993 இல் அன்று எமது பாடசாலையில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திரு இ. சிவானந்தம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், மருதனார்மடம்) அவர்களுக்கும், விழாவில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருக்கும், எமக்கு பலவித உதவிகளையும் செய்த யாவருக்கும் நன்றி கூறுகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்தி சபையினர்,
பழைய மாணவர் சங்கத்தினர்.

(சி-4824)

# கண்ணீர் அஞ்சலி

கடமையின்போது
அகாலமரணத்தைத் தழுவிக்கொண்ட
இலங்கை செஞ்சிலுவைச் சங்க
யாழ். கிளை உபதலைவரும்
இணையப் பிரதிநிதியுமாகிய

## திரு. கந்தையா புவனேந்திரன்

அவர்கட்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்
அன்னாரின் பிரிவால் துயருறும்
அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

— நிர்வாகமும் - அங்கத்துவ நிறுவனங்களும்,
யாழ். மாவட்ட, அரச சார்பற்ற
நிறுவனங்களின் இணையம்.

(சி/4825)

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,**
யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

அமரர்

## திரு. க. புவனேந்திரன்

( உப தலைவர் )
அவர்களின் மறைவையொட்டி
சங்க ஊழியர்களின்

# கண்ணீர் அஞ்சலி

செஞ்சிலுவைச் சங்கமதில் அன்று
சேவை செய்திட வெண்ணியே,
நெஞ்சினை நிமிர்த்திக் கொண்டே
நீண்ட தோர் தொண்டென,
அஞ்சிடும் மக்களின் துயரினை
அகற்றிடும் வேளையின் போது,
துஞ்சியதோ உந்தன் உடல்
துடிக்கிறதே ஊழியர் நெஞ்சம்.

ஊழியர்கள்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
10-04-1993

(சி/4828)

## ஆலயங்களில்

வண்ணை - கலட்டி ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தில் இன்று ஞாயிறு இரவு தண்டிகைத் திருவிழா நடைபெறுகிறது.

தேர்த்திருவிழா புதுவருடப் பிறப்பான புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும்; தீர்த்தத் திருவிழா அடுத்த நாள் வியாழன் மூற்பகல் இடம்பெறும். (அ)

o o o

ஆனைக்கோட்டை புளியங்கண்டுப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை மாலை நடைபெறும் 11ஆம் திருவிழாவில் விசேட அபிஷேக ஆராதனையும் புகழ்பெற்ற நாதஸ்வர தவில் வித்துவான்களின் மங்கள இசையும் இன்னிசை விருந்தும் இடம்பெறும். (க)

o o o

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவிலில் புத்தாண்டுப் பிறப்பு விழா 13ஆம் திகதி மாலை 7மணிக்கு அபிஷேக பூசை ஆராதனையுடன் ஆரம்பிக்கப்படும்.

14ஆம் திகதி அதிகாலை 6மணிக்கு உஷாக் காலப் பூசையுடன் வசந்த மண்டபப் பூசை, சங்கிராந்தி தீர்த்தம், சூரியப் பொங்கல், பஞ்சாங்கம் படித்தல், கைவிசேட வைபவம் மற்றும் விசேட பூசைகளும் நடைபெறும். (க-68)

o o o

சுதுமலை அருள்மிகு ஸ்ரீபுவனேஸ்வர அம்பாள் கோவில் குளிர்த்தி விழா நாளை திங்கள் காலை 10 மணிக்கு நடைபெறும். [த-90]

o o o

அளவெட்டி தெற்கு நந்தன வைரவர் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பங்குனி குளிர்த்தி விழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் டொனால்ட் கணேஷ குமார் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆரம்பமாகியுள்ளது.

ஐம்பது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட இந்த ஆட்டத்தொடரில் இன்று யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் அணி மோதும்.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9 மணிக்கு இந்த ஆட்டம் ஆரம்பமாகும். (உ-20)

★ ★ ★

சுன்னாகம் ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஸ்கந்தா மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை ஆனைக்கோட்டை அறிவொளி வி. க. அணியை எதிர்த்து அளவெட்டி விநாயகர் அணி மோதும். (உ)

**வல்லைப்...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

படையினரின் ஆட்லறி ஷெல்லுக்கு இலக்காகி மண்டான் தோட்டப் பகுதியில் வேலை செய்துகொண்டிருந்த கதிரவேல் செல்வராசா (வயது 31) படுகாயமடைந்தார். இவரும் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

படையினரின் தாக்குதல்களினால் வல்லைப் பாலத்தில் இரு இடங்களில் கரையோர மதில்கள் உடைந்து காணப்படுகின்றன.

படையினர் திடீரென வல்லைப் பாலத்தை நோக்கி தாக்குதலை ஆரம்பித்ததும், பாலம் ஊடாக பயணம் செய்துகொண்டிருந்த பொது மக்கள் தமது சைக்கிள்களைப் போட்டுவிட்டு பாலத்துக்குக் கீழ் தண்ணீருக்குள் பாய்ந்தும், பாலத்திற்குக் கீழ் மறைந்தும் தப்பி ஓடி வந்தனர்.

இந்தத் தாக்குதல்களினால் வல்லைவெளியூடான போக்குவரத்து நேற்றுப் பகல் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

வல்லைப்பாலம் கடந்த வருடமும் ஸ்ரீலங்காப் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி [illegible] குறிப்பிடத்தக்கது.

(உ-[illegible])

# இன்று ஈஸ்டர் ஞாயிறு தினம்

யாழ்ப்பாணம் ஏப். 11

பெரிய வெள்ளியன்று சிலுவையில் அறையுண்ட யேசுபிரான் உயிர்த்தெழுந்த ஞாயிறு — ஈஸ்டர் தினம் இன்றாகும்.

உலகம் முழுவதிலும் உள்ள தேவாலயங்களில் இன்று விசேட ஆராதனைகளும், பூசைகளும் நடைபெறும்.

யாழ்ப்பாணக் குடாநாட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பெண் ஆசிரியர்கள் தேவை

1. புவியியல்
2. சித்திர ஆசிரியர்கள்
3. இலிகிதர்
4. பாலர் கல்வி ஆசிரியர்கள்

அறிவுறுத்தல்கள்:-

ஆசிரியர்கள் க. பொ. த. உயர்தரம் நான்கு பாடங்களிலும் சித்தி பெய்தி இருத்தல் வேண்டும். புவியியல் ஆசிரியர் பதவிக்கு க. பொ. த. உயர்தரம், புவியியல் பாடத்தில் விசேட சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

நேர்முகத் தேர்வு:

**13-04-1993**, காலை **8. 30** மணிக்கு

இடம்: முத்துத்தம்பி, ஆரம்ப பாடசாலைக்கு அருகில் உள்ள மகளிர் அலுவலகம்.

நேர்முகத் தேர்வுக்கு சகல சான்றிதழ்கள், அத்தாட்சிப் பத்திரங்களுடன் குறிப்பிடப்பட்ட திகதியில் நேரில் சமுகமளிக்கவும், (25207)

முறைசாராக் கல்வி - வார இறுதி

# ஆங்கில பயிற்சி - 1993

யாழ். கல்விப் பணிப்பாளரின் பத்திரிகை விளம்பரத்துக்கமைய இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் மேற்படி பயிற்சிகள் இவ்வாண்டும் நடைபெற உள்ளன. பயிற்சிக் காலம் ஆறு மாதங்கள், விண்ணப்ப முடிவு திகதி: **15 - 04 - 1993**, வகுப்புகள் ஆரம்பமாகும் திகதி: **02 - 05 - 1993**. ஏற்கனவே இங்கு பயிற்சி பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

அதிபர்,
யா/ இணுவில் சைவப்பிரகாச
மகாவித்தியாலயம்

10-04-1993.

(சி-4823)

# அஞ்சலி

## திரு. K. புவனேந்திரன்

(உப தலைவர், இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளை)

பாதிக்கப்பட்ட மக்களுக்கான பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில் நலிவுடைந்த மக்களின் நிழல் என சர்வதேசத்தின் அங்கீகாரத்தைப் பெற்று செஞ்சிலுவைக் கொடியை உதாசினஞ் செய்து வீசப்பட்ட குண்டுக்குப் பலியான இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் உப தலைவர் திரு. K. புவனேந்திரனின் மறைவுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

இவரது இழப்பினால் துயருற்றிருக்கும் இவரது குடும்பத்தினருக்கும், இவர் சார்ந்த அமைப்பிற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

—தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

(சி/4829)

# கண்ணீர் அஞ்சலி

## க. புவனேந்திரன்

(இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை உபதலைவர்)

திரு. க. புவனேந்திரன் அவர்கள், அல்லலுறும் எம்மக்கள் துயர் துடைத்து, இன்னலுறும் எம்மவர் உயிர்காத்திடும் வேளை தனில் தன்னுயிரைத் தியாகம் செய்துவிட்ட உத்தமன். அன்னாரின் பிரிவுதனைத் தாங்காமல் வேதனையுறும் எம்மக்களுக்கும் குறிப்பாக அவரைப் பிரிந்து துடிதுடிக்கும் குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறி எம் கண்ணீரை அஞ்சலியாகச் செலுத்தி அமரரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகிறோம்.

செஞ்சிலுவைச் சங்க சேவையில்
யாழ. பிரிவு நிர்வாகத்தினர்

(25209)

யா/ சன்மார்க்க மகா வித்தியாலயத்தின்

# கண்ணீர் அஞ்சலி

## திரு. க. புவனேந்திரன்

10 - 04 - 93 இல் அகாலமரணமடைந்த எமது பாடசாலை ஆசிரியரும் யாழ். செஞ்சிலுவைச் சங்க உபதலைவருமான திரு. க. புவனேந்திரன் அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

குறிப்பு:- சகல ஆசிரியர்களையும், மாணவர்களையும் பிற்பகல் இரண்டு மணிக்குப் பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

[25210]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிலுநர் ஆசிரியர்களுக்கு

# ஆபத்துக் கால ஊக்கப் பணம் அரசு உடன் வழங்க வேண்டும்

## தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 11 பயிலுநர் ஆசிரியர்களுக்கும் ஆபத்துக்கால ஊக்குவிப்புப் பணத்தை அரசாங்கம் தாமதியாது வழங்க வேண்டும்.

அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்ற கல்வி அமைச்சின் இடம்பெயர் சேவையின் போது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பயிலுநர் ஆசிரியர்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிச் சமர்ப்பித்த ஆறு அம்ச மகஜரில் இவ்வாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

மகஜரில் உள்ள பிற கோரிக்கைகள் வருமாறு:

★ கஷ்டப் பிரதேசங்களிலும், மிகக் கஷ்டப் பிரதேசங்களிலும் சேவை செய்யும் பயிலுனர் ஆசிரியர்களுக்கு, அவர்களின் மாதாந்த ஊதியத்தின் முறையே 10, 15 வீதத்தை, கஷ்டப் பிரதேச அலவன்ஸ் ஆக வழங்கவேண்டும்.

★ பயிலுநர் ஆசிரியர்கள் ஓர் ஆசிரியர் பாடசாலைக்கும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் அப்பாடசாலையின் பதில் அதிபர்களாகவும் கடமையாற்றுகின்றமையால், அப்பாடசாலையின் அதிபர்களுக்கான புதிய அலவன்ஸை அவர்களுக்கே வழங்க வேண்டும். பயிலுநர் ஆசிரியர்கள் விரும்பி திருப்தியாகக் கற்பிக்கக் கூடிய பாட நெறிகளில் பயிற்சி பெற அனுமதிக்க வேண்டும்.

★ பட்டதாரிப் பயிலுநர்களைப் பொறுத்தளவில் 1993 ஜனவரியில் இருந்து 360 ரூபா சம்பள உயர்வும், 1993 ஜூலையிலிருந்து மேலும் 240 ரூபா வழங்கவும் அரசு ஆவன செய்ய வேண்டும்.

★ பட்டதாரிப் பயிலுநர்களை இலங்கை பல்கலைக் கழகங்களினாலும், திறந்த பல்கலைக்கழகத்தினாலும், தேசிய கல்வி நிறுவகத்தாலும் நடத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிக்குத் தோற்ற கல்வி அமைச்சு ஆவன செய்ய வேண்டும்.

இக்கோரிக்கைகள் அடங்கிய மகஜரை சங்கத் தூதுக்குழு கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரனிடம் சமர்ப்பித்தது. (க)

## உரிய முறையில் பாதுகாக்கப்படாத ஏற்பு வலி தடுப்பு மருந்து குறித்து எச்சரிக்கை தேவை

யாழ்ப்பாணம், ஏப், 11 குளிர்சாதனப் பெட்டியில் வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டிய ஏற்புவலி தடுப்பூசி மருந்து இங்குள்ள பல தனியார் மருந்தகங்களில் தண்ணீரினுள் வைத்தே பாவிக்கப்படுவதாக அறியவருகிறது.

எனவே இது பற்றி பொது மக்கள் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு தண்ணீரில் வைத்த ஏற்பு நோய்த் தடுப்பு மருந்தை நோயாளர்களுக்குப் பாவிப்பதால் எதுவித பயனும் ஏற்படாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-162)

## தமிழ் இசை விழா ஐந்தாம் நாள்

யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் தமிழ் இசைவிழா ஐந்தாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும்.

நல்லூர் பண்டாரக்குளம் மருதர்வளவு விநாயகர் ஆலய முன்றலில் நடைபெறும் இன்றைய நிகழ்ச்சிகளில் பாட்டு, புல்லாங்குழல், வயலின் கச்சேரிகள் இடம்பெறும். (க)

## ஈஸ்டர் பஜனைகள்

யாழ்ப்பாணம், ஏப் 11 ஈஸ்டர் ஞாயிறான இன்று ஞாயிற்றுக்கிழமை மானிப்பாயிலும், யாழ்ப்பாணத்திலும் ஈஸ்டர் பஜனைகள் நடைபெற உள்ளன.

தென்னிந்தியத் திருச்சபை யாழ் திருமண்டலம் சபைகள் இணைந்து நடத்தும் ஈஸ்டர் பஜனை இன்று மாலை 4-00 மணிக்கு மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்திய சாலை திறந்தவெளி அரங்கில் நடைபெறும்.

o o o

ஸ்வரராகலய விநோத சுரபி சங்கீதபூஷணம் எல். திலகநாயகம்போலின் ஈஸ்டர் பஜனை இன்று பிற்பகல் 3-30 மணிக்கு சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

அருட்கலாநிதி ஐசக் ஹென்றி விக்ரர் வைபவத்துக்குத் தலைமை வகிப்பார். (இ)

## சர்வதேச கடத்தல்காரர்

கொழும்பு, ஏப். 11 கடந்த வியாழக்கிழமை அன்று தெஹிவளை - களுபோவிலையில் வைத்து கைது செய்யப்பட்ட வர்த்தகர், சர்வதேசக் கடத்தல்காரர் என்று அடையாளம் காணப்பட்டார்.

அவரது வீட்டில் இருந்து 10.5 கிலோ கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது தெரிந்ததே. (த-எ)

## கோடீஸ்வர வர்த்தகர் கைது!

கொழும்பு ஏப். 11 இத்தாலியில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத் தருவதாக இளைஞர்கள் பலரை ஏமாற்ற 50 லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்ததாக கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரை நீர்கொழும்பு பொலீஸார் கைது செய்துள்ளனர். (த-எ)


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L DAY CLASSES 8·00 — 2·00

மீண்டும் ஒரு புதிய பிரிவு

பிரிவு - IV

ஆரம்பம்: 17 - 04 - 1993

சனி காலை 8-00 மணி

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
★ வாரத்தில் 4 நாட்கள் நடைபெறும்
★ கணிதம், விஞ்ஞானம் வாரத்தில் 6 மணித்தியாலம் நடைபெறும்.
★ இவ்வருடம் 5 பிரிவுகள் மட்டுமே ஆரம்பமாகும்.

(இ-4907)


பிரதேசச் செயலகம், நல்லூர்

## தமிழ் - சிங்கள புத்தாண்டு விழாப் போட்டிகள்

பேச்சு, கவிதை,
கூட்டுப் பாடல் (குழு),
கிராமிய நடனம்

மேற்படி போட்டிகள் 12 - 04 - 1993 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைந்துள்ள பலாலி ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் நடைபெறும். விண்ணப்பித்த எல்லாப் போட்டியாளர்களையும் குறிப்பிட்ட நேரத்திற்குச் சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். கட்டுரைப் போட்டியில் பங்குபற்றுவோர், 12 - 04 - 1993 நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் கட்டுரைகளை எனது பிரதேசச் செயலகத்தில் ஒப்படைக்கவும். விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் சம்பந்தப்பட்டோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

ஆ. மகாலிங்கம்,
பிரதேசச் செயலர் / மேலதிக அரசாங்க அதிபர்,
நல்லூர்.

10 - 04 - 1993

(இ-4922)


கொக்குவில் மேற்கு

# ஸ்ரீ வாராகி அம்மன் கோவில் புதிய சப்பற வெள்ளோட்ட விழா

நாளை (12 — 04 — 1993) திங்கட்கிழமை மாலை 5 00 மணியளவில் நடைபெறும்.

ஆசியுரை: கானகதா வாரிதி
பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா
(ஆசிரியர் - கந்தர்மடம்)

விடயம்:

சப்பறத் திருவிழா மகிமை

★ அம்பாள் அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மா. பரமேஸ்வரன்,
(ஆலய முகாமையாளர்),
சு. நல்லையா,
(நிர்வாகஸ்தர்).

சப்பறத் திருவிழா உபயகாரர்கள்,
(வாராகி அம்மன் கோயிலடி).

(25202)

''உலகெலாம் தமிழ் ஒலிக்குக''

# யாழ். அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் 35-வது ஆண்டு தமிழ் இசை விழா

இடம்: நல்லூர் பண்டாரக்குளம் விநாயகர் ஆலய முன்றல்

11 - 04 - 93 ஐந்தாம் நாள் நிகழ்ச்சிகள்

மாலை 7—00 மணி

| | |
|---|---|
| செல்வன் வா. சுஷாந் | — புல்லாங்குழல் |
| செல்வி சி. சுகன்யா | — வயலின் |
| செல்வன் ப. ரதிரூபன் | — மிருதங்கம் |

7—30 மணி

| | |
|---|---|
| செல்வி சாரதா சச்சிதானந்தம் | — பாட்டு |
| செல்வி பாக்கியலட்சுமி நடராசா | — வயலின் |
| திரு. மா. சிதம்பரநாதன் | — மிருதங்கம் |
| திரு. V. தபோதநாயகம் | — கடம் |

8·15 — 9 30 மணி

| | |
|---|---|
| திரு. உ. இராதா கிருஷ்ணன் / செல்வன் சு. கோபிதாஸ் | — இரு வயலினிசை |
| செல்வன் க. கண்ணதாசன் | — மிருதங்கம் |
| திரு. எஸ். வீராச்சாமி | — கெஞ்சிரா |
| செல்வன் சதா வேல்மாறன் | — கடம் |

வாழ்த்துவோர்:

★ அம்பாள் ஸ்ரோர்ஸ் ★
அரியாலை.

(25200)

# மலிவு விற்பனை

ஆண்களுக்கான
றெடிமேட் ரவுசர் - 520/-
றெடிமேட் சேட் - 340/-
றெடிமேட் சேட் - 290/-

த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்,
(பாரதியார் சிலைக்கு அருகாமையில்)
156, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(25201)

குருநகர்
புனித - ஜேம்ஸ் மகாவித்தியாலய
பழைய மாணவர் மன்ற

# வளர்ச்சி நிதிக்காக

புனிதயாகப்பர் கலை மன்றம் வழங்கும்
''வீரமா தேவி''
(சோழர் வரலாற்று நாட்டுக் கூத்து)

காலம்: இன்று 11 — 04 — 1993 (உயிர்த்த ஞாயிறு) மாலை 6-30 மணி
இடம்: குருநகர் கலை அரங்கு
பிரவேசம்: ரூபா 10/-
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பளிப்பு:-
அமலன் ஸ்ரோர்ஸ்
தொடர்மாடி அருகாமை,
குருநகர், யாழ்ப்பாணம்.

(25199)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய ஆண், பெண் நாய்களும், நான்கு மாதங்கள் நிரம்பிய வெள்ளை நிற பொமனேரியன் நாய்களும் விற்பனைக்குண்டு. J. அல்பிறெட், இல. 25, பாக் றோட், குருநகர், யாழ்ப்பாணம். (25175)

நல்ல நிலைமையிலுள்ள ஓடியோ றெக்கோடிங் உபகரணங்கள், மாஸ்டர் கசட்டுகள், இசைத்தட்டுக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சேக்கின் சென்ரர், பிரதான வீதி, சங்கானை. (25173)

நல்லின 2ஆம் ஈற்று சணன் பால் ஆடு, 1½ மாத மறிக்குட்டியுடனும், 4½ மாத வயதுடைய Dark-Brown பொமனேரியன் ஆண் நாய்க்குட்டியும், உயர் இனப் புறாக்களும் உடன் விற்பனைக்கு உண்டு. மனோன் மாஸ்ரர், அரசடி, நவாலி தெற்கு, மானிப்பாய். (6111)

### தேவை

பிரெஞ்சு மொழி கற்க விரும்பும் ஒருவருக்கு அம்மொழியில் கற்பிக்கும் ஆற்றல் உள்ள ஓர் ஆசிரியர் தேவை. தொடர்பு: இல. 899, மே/பா உதயன். (6108)

ஜாம்போத்தல்கள், பன்ரா, கொக்கோகோலா, வகையிலான 300 மில்லி லீற்றர், 160 மில்லி லீற்றர் போத்தல்கள் என்பன எம்மால் நியாய விலையில் கொள்வனவு செய்யப்படும். சுரபி பழரசத் தொழிற்சாலை, கோப்பாய் தெற்கு, கோப்பாய். (சி-4894)

### மணமகன் தேவை

24 வயது, இந்து, கார்த்திகை நட்சத்திரம், ஜேர்மனியில் வசிக்கும் மணப்பெண்ணுக்கு தகுந்த 30 வயதிற்கு உட்பட்ட ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ் நாடுகளில் வசிக்கும் மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்: இல. 516, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (25116)

இந்துமத 33 வயதிற்கு மேற்பட்ட பட்டதாரி மணமகனை எதிர்பார்க்கின்றோம். பெண் அதே தரத்தைச் சேர்ந்தவர். இவ்விடயத்தில் அக்கறையுள்ளோர் முகவரியை மாத்திரம் அறிவித்தால் போதுமானது. இல. 517, மே/பா உதயன். (25152)

### மணமகள் தேவை

யாழ். இந்து. சுத்த சைவம் உடைய தற்பொழுது சுவிஸில் கம்பியூட்டர் எஞ்ஜினியராக கடமையாற்றும் 30 வயது மணமகனுக்கு, மணமகள் படித்தவராகவும், சைவமாகவும், குறைந்தது 5' 3'' உயரமுடையவராகவும், நற்குணம், சிவந்த நிறம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். பொருத்தமற்ற ஜாதகமும் புகைப்படமும் திருப்பி அனுப்பி வைக்கப்படும். இல. 09, மே/பா உதயன் சேவை நிலையம், இல. 82, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (5877)

### ஆண்டு - 5 புலமைப்பரிசில்

சிந்தனையைத் தூண்டும் முன் மாதிரிப் பரீட்சை 1993, எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்காத வெளிமாணவர்களும் தோற்றலாம். இலவச வகுப்புக்களும் நடத்தப்படும். பரீட்சை ஆரம்பம்: 11-04-93 ஞாயிறு காலை 10-00, மாலை 3-00. உதயன் அக்கடமி, நல்லூர். (25192)

### மணப்பெண்கள் தேவை

சுத்தோலிக்க முறையே 34, 33 வயது எக்கவுண்டன் மணமக்களுக்கு பெண்கள் தேவை. சந்திப்பு: ஞாயிறு காலை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (25109)

### மிருதங்கம்

மிருதங்க பரீட்சை எடுக்கும் மாணவர்களின் மிருதங்க திருத்த வேலைகள் மிக விரைவில் நல்ல முறையில் மலிவாக செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (25183)

### PERSONAL CLASSES

Basic English, General English, Advanced English ஆரம்பம் 10-04-93 காலை 9-00 மணிக்கு. க. சபாநாயகம், இல. 4, பிள்ளையார் ஒழுங்கை, திருநெல்வேலி. [25162]

### காணாமல் போய்விட்டது

கறுப்பு நிற 100அடி நீளமுடைய 2'' விட்டமுடைய தண்ணீர் இறைக்கும் அல்கத்தீன் பைப் காணாமல் போய்விட்டது. இது பற்றி தகவல் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: இ. அ. சுப்பிரமணியம், கதிர்வேலாயுத சுவாமி, கோவில் மேற்கு ஒழுங்கை, சுழிபுரம் மேற்கு. (6112)

### O/L கணிதம்

Distinction பெறுபேறடைய வாரம் ஐந்து மணித்தியாலங்கள். ஆண்டுகள் 10, 9 உட்பட முப்பது வருட அனுபவமுள்ள B. Sc. (Cey.) ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. (25194)

### O/L MATHS

G.C.E. O/L இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும் இருபத்தாறு வருட அனுபவமுடைய ஆசிரியரினால் நாற்பது மணித்தியாலங்களில் (Distinction) பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (25191)

### இலவச திருமண சேவை

27 வயது, பூரட்டாதி, ஜேர்மனியில் தொழில்புரிபவருக்கு மணப்பெண் தேவை. விவாகம் இலங்கையில் அல்லது அழைக்கப்படும். ஆசாரித் தொழில் ஈடுபாடுள்ளவர் விரும்பத்தக்கது. தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [25113]

35 வயது, புனர்பூசம், செவ்வாய் 1, கனாடவில் தொழில்புரிபவர் யாழ். வந்துள்ளார். படித்த, பண்பான மணப்பெண் தேவை. விவாகம் செய்து அழைக்கலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (25155)

### தவறிவிட்டது

முருகேசு சின்னராசாவின் குடும்ப அட்டை, நிவாரண அட்டை, ஸ்ரீசங்கரின் படம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் 28-01-1993இல் நல்லூர் அரசடி சந்திக்கும் பிறவுண் றோட் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து திருமதி கோ. தனபாலசிங்கம், அரசினர் நெசவு ஆசிரியர் பயிற்சிப்பாடசாலை, அரசடி வீதி, நல்லூரில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (25197)

### புதிய வெளியீடு

கைவிஷேசம் புதுவருஷப் பிறப்பு கருமங்கள் தொடங்கும் முகூர்த்த வேளைகள் கைரேகை சாஸ்திரம் (இருதய ரேகையின் பலன்கள்) 14-04-93 செவ்வாய் மாற்றம் அடங்கியவை. புதிய வெளியீடு ரூ. 8-50. எங்கும் விற்பனையாகின்றது. பாலாஜி புத்தகசாலை, யாழ்ப்பாணம். (நூலாசிரியர் Prof. சத்தியதாஸன்) [5880]

## பொலீஸ் கொமாண்டோ பாதுகாப்பு!

டாக்கா, ஏப். 11

சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு பொலிஸ் கொமாண்டோக்கள் பாதுகாப்பு வழங்குகின்றனர்.

அத்துடன் அவர் பாவிப்பதற்காக குண்டு துளைக்காத காரும் வழங்கப்பட்டுள்ளது. (த-எ)


**BOND INSTITUTES**

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 95

மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்

ஆரம்பமாகிவிட்டன: **10-04-1993**

எமது ஆசிரியர் குழு:

CHEMISTRY
திரு. மகாதேவா
திரு. சிவசோதி
திரு. குமரன்

PHYSICS
திரு. ரூபநாதன்

BOTANY
திரு. சதீஷ்

ZOOLOGY
திரு. அல்போன்ஸ்

PURE & APPLIED

ECONOMICS
திரு. கணேசன்

COMMERCE
திரு. வரதன்

ACCOUNTS
திரு. தேவதாஸ்

LOGIC
திரு. ஜெயராஜ்

HINDU - CIVIL.
திரு. கமலநாதன்

TAMIL
திரு திருஞானம்

GEOGRAPHY
திரு. வில்சன்

(சி-4806)


## வாரிவளவு - நல்லியக்கச் சபை
காரைநகர்.

க. பொ. த. [சாதாரணம்] மார்கழி - 1992

மேற்படி பரீட்சையில் இடம்பெயரும் முன்பு காரைநகர் கொத்தணி பாடசாலைகளில் பயின்று தற்பொழுது வேறு பாடசாலைகளிலிருந்து மேற்படி பரீட்சைக்கு தோற்றி நான்கு பாடங்களில் அல்லது அதற்கு மேல் விசேட சித்தியும் (D), திறமைச் சித்தியும் (C) பெற்ற மாணவர்கள் தங்கள் பெறுபேறுகளை அதிபர்கள் மூலம் உறுதிப்படுத்தி இடம்பெயரும் முன்பு பயின்ற பாடசாலையையும் குறிப்பிட்டு 15-04-1993க்கு முன்பு எங்களுக்கு அறியத்தரவும். மேற்படி மாணவர்களை பாராட்டி பரிசளிக்கும் முகமாகவே இவ் விவரம் கேட்கப்படுகிறது.

## தமிழ் புத்தாண்டு
## காரை.சிறுவர்களின் கலைநிகழ்ச்சிகளும் பரிசளிப்பும் - 1993

[23ஆவது வருடம்]

காலம்: 1993-04-17 சனிக்கிழமை, 1993-04-18 ஞாயிற்றுக்கிழமை } பிற்பகல் 1 மணி

இடம்: யாழ். இந்துக்கல்லூரி, குமாரசாமி மண்டபம்

- இன்னிசைக் கச்சேரி
- நடனம்
- பட்டிமன்றம்
- நாடகம்

● யாழ். பல்கலைக் கழகத்திற்கு மருத்துவம், கலை முகாமைத்துவ பீடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட காரைநகர் மாணவர்களை பாராட்டலும் பரிசளிப்பும்.

✶ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ✶

### யாழ். பல்கலைக்கழக காரைநகர் மாணவர்களுக்கான நிதியுதவி - 1993/94

லண்டன் காரைநகர் நல்லியக்கச் சபையினர் யாழ். பல்கலைக் கழகத்திற்கும் நிதியுதவி தேவைப்படும் திறமையான மூன்று காரைநகர் மாணவர்களுக்கும் மாதாந்தம் ரூபா 500/- (ஐந்நூறு) பரீட்சார்த்தமாக வழங்க முன் வந்துள்ளார்கள்.

பெற்றோர்கள் இடம் பெயரும் முன் நிரந்தரமாக காரைநகரில் வசித்திருத்தல் வேண்டும். இவ் உதவி பெற விரும்புவோர், தங்கள் குடும்ப அங்கத்தவர்களின் வருமானம் உட்பட சுய விவரங்களை 1993-05-05 திகதிக்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

நிர்வாக செயலர்,
வாரிவளவு - நல்லியக்கச் சபை.

148/10, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
1993-04-09.

வாழ்த்துவோர்கள்:
சிமாட்டி ஜவுளி சமுத்திரம்,
யாழ்ப்பாணம், திருநெல்வேலி.

(25198)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 01 - 07 - 1935

மறைவு: 11 - 04 - 1992

## அமரர் மாரிமுத்து நடராசா

நினைவெல்லாம் கனவாக,
நெஞ்சு நிறை ஆசையுடன்
கனவுபோல் மறைந்தெம்மை
கலங்கவிட்டீர் காலமெல்லாம்
ஒருவருடம் தானென்ன
உயிருள்ள வரை நாங்கள்
நினைவிலுமை நிறுத்துவோமே
நீர் நிறைந்த கண்களோடு!

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிமார்,
உற்றார், உறவினர்கள்.

11, பேக்கரி லேன்,
ஆஸ்பத்திரி றோட்,
யாழ்ப்பாணம்.

(25118)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### நேரில் வந்தால் நிலைமை தெரியும்

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கும் ஈழத் தமிழர்களை திருப்பி அனுப்புவது என்று அந்நாடுகளில் பலவும் அண்மைக் காலத்தில் முடிவு செய்திருந்தன.

கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார மாற்றங்களின் விளைவுகள், மேற்கு நாடுகளுக்குப் புதிதாக ஏற்பட்டுள்ள சொந்தப் பிரச்சினைகள் என்பனஅவை அகதிகளுக்குத் தஞ்சம் அளிக்கும் கொள்கைகளையும் நடைமுறைகளையும் மாற்றுவதற்கும், இறுக்குவதற்கும் ஏதுவாகின என்பது பொதுவான காரணம்.

வடக்கு-கிழக்கில், ஈழத் தமிழர்களின் தாயகத்தில் இன்னும் அமைதி திரும்பவில்லை. யுத்தம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அரசாங்கப் படைகளின் இராணுவ நடவடிக்கைகளால் தமிழர்கள் தொடர்ந்து நிர்க்கதிக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்த நிலைமையை நன்றாகத் தெரிந்து கொண்டும்கூட, இந்தியா தமிழகம் சென்ற ஈழத்தமிழர்களை பலவந்தமாக, நிர்ப்பந்தப்படுத்தி, அழுத்தங்களைக் கொடுத்து திருப்பி அனுப்பி வருகிறது.

அதனை முன்னுதாரணமாகக் கொண்டும், அல்லது அதனைப் பின்பற்றியும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும் ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப உத்தேசித்தன. அந்த வகையில் ஈழத் தமிழர்களை திருப்பி அனுப்புவதில் அவசரம் காட்டிய ஐரோப்பிய நாடுகள், அது குறித்துத் தீர்க்கமாக முடிவு செய்வதற்கு முன், செயலில் இறங்குவதற்கு முன்னர் இதுவிடயத்தை மறுபரிசீலனை செய்ய முன்வந்திருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

அகதிகளைத் திருப்பி அனுப்புவது ஒரு புறமிருக்க, வடக்கு-கிழக்கின் நிலையை வெளிநாடுகளின் தூதுவர்கள் நேரில் வந்து பார்ப்பது பல வழிகளிலும் நன்மை பயக்கும்.

கொழும்பில் உள்ள வெளிநாடுகளின் தூதுவர்கள் வடக்கு-கிழக்குப் பிரதேசத்துக்கு அரசினால் ஏற்பாடு செய்யப்பட்ட விஜயம் மேற்கொள்ளாமல், தமது சொந்தத்தில் சுயேச்சையாக வந்து செல்லவேண்டும். அப்போதுதான் ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்குரிய பின்னணிகளையும், அவர்களது அரசியல் அபிலாசைகளையும், அவற்றின் நியாயங்களையும் அவர்களால் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழர்களை மனிதாபிமானமற்ற முறையில் எவ்வாறு அடக்கி ஆள்கிறது. மிருகத்தனமாகக் கொன்று குவிக்கிறது, பட்டினி போட்டும் நோய்க்கு மருந்து அனுப்பாமலும் எவ்வாறு சாகடிக்கிறது என்பனவற்றை நேரில் கண்டும் கேட்டும் அறியலாம். கொழும்பில் இருந்து கொண்டு அரசு செய்யும் பொய்ப்பிரசாரம் எத்தகையது அதன் மூலம் தமக்குக் கிடைக்கும் ஒரு பக்கச் சார்புப் பார்வை உண்மை நிலையை விட எந்தளவு வித்தியாசமானது என்பதனையும் விளங்கிக் கொள்ளலாம். அவற்றினூடு தமிழர் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு எத்துணை அவசியமானது என்பதையும் உணர முடியும். அதற்கேற்ற விதத்தில் தாம் எவ்வாறு நீதி வழி நின்று கொழும்பு அரசு மீது எத்தகைய அழுத்தங்களைப் போடலாம் என்பதனையும் மதிப்பிட்டுக் கணக்கிட முடியும்.

எனவே வெளிநாடுகளின் — ஐரோப்பிய நாடுகளின் — தூதுவர்கள் வடக்கு-கிழக்குக்கு தவறாது வரவேண்டும். அவர்களது வருகையின் மூலம் தமிழர் பிரதேசத்தில் அமைதி பிறக்குமானால், யுத்தம் நின்று தமிழர்களின் உரிமைகள் கிடைக்குமானால் அதன் பின்னர் அவர்கள் தமது நாடுகளில் உள்ள ஈழத்தமிழ் அகதிகளை அனுப்பி வைக்க எவ்வித தடங்கலும் இருக்காது.

## ஏழாவது சார்க் மாநாடு டாக்காவில் நேற்று ஆரம்பம்

தென் கிழக்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்பு மாநாடு (சார்க்) நேற்று பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் ஆரம்பமானது.

இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசவிடம் இருந்து பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா ஷியா சார்க் அமைப்பின் தலைமைப் பொறுப்பை நேற்று முறைப்படி ஏற்றுக் கொண்டார்.

நேற்று ஆரம்பமான ஏழாவது சார்க் உச்சி மாநாட்டில் இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், பூட்டான், மாலைதீவு, இலங்கை ஆகிய நாடுகளின் அரசுத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

வெளிநாட்டுத் தலைவர்களுக்கு பங்களாதேஷ் அரசு செங்கம்பள வரவேற்பு அளித்தது. பிரதமர் காலிதா ஷியா, தலைவர்களை தனித்தனியாக வரவேற்றார்.

சார்க் நாடுகளின் புதிய தலைவர் திருமதி பேகம் காலிதா ஷியா உரையாற்றுகையில் —

சார்க் நாடுகள் மத்தியில் ஒத்துழைப்பை அதிகரிப்பது, பிராந்தியத்தில் சமாதானம், ஸ்திரப்பாடு, சுபிட்சம் ஆகியவை உறுதிப்படுத்துவதற்கு உறுதுணை புரியும்— என்றார்.

இந்த நூற்றாண்டிற்குள் பிராந்தியத்தில் வறுமையை ஒழித்துக்கட்ட முடியும் என்று ஜனாதிபதி பிரேமதாச நம்பிக்கை வெளியிட்டார்.

ஏனைய தலைவர்களும் மாநாட்டில் உரையாற்றினர். மாநாடு இன்றுடன் முடிவடையும். (ஒ)

## ராவுக்கு எதிராக நேற்று டாக்காவில் ஊர்வலம்

டாக்கா, ஏப். 11

இஸ்லாமிய அடிப்படைவாதிகள் எனக் கருதப்படும் சுமார் ஆயிரம் பேர் நேற்று பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் இந்திய பிரதமர் நரசிம்மராவுக்கு எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

டாக்காவில் மசூதி ஒன்றில் இருந்து சர்வதேச விமான நிலையம் வரை எதிர்ப்பு ஊர்வலம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் இந்திய தேசியக் கொடியையும் தீயிட்டுக் கொளுத்தினர்.

ஊர்வலம் சென்றவர்களை தடியடிப் பிரயோகம் நடத்தியும், கண்ணீர் புகைப் பிரயோகம் நடத்தியும் பொலீஸார் கலைத்தனர். இருவர் கைது செய்யப்பட்டனர்.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் டாக்கா வந்தடைவதற்கு சற்று முன்னர் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## திருமலைக்கு இருதடவைகள் 'குமண' கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஏப் 11

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் "குமண" கப்பல் அடுத்து இருதடவைகள் பருத்தித்துறைக்கும் — திருமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடவிருக்கிறது.

எதிர்வரும் 14 ஆம் திகதி பருத்தித்துறையில் இருந்து புறப்படும் 'குமண' கப்பலில் அரச அதிகாரிகளையும், அரச ஊழியர்களையும் திருமலைக்கு அழைத்துச் செல்லவும்—

கொழும்பில் சிகிச்சை பெற்று திரும்புவோரைத் திருமலையில் இருந்து அழைத்துக் கொண்டு 16 ஆம் திகதி 'குமண' மீண்டும் பருத்தித்துறைக்கு வந்து சேரவும்— ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பருத்தித்துறையில் இருந்து கொழும்பு செல்லும் நோயாளர்களை ஏற்றிக் கொண்டு அன்றைய தினமே 'குமண' திருகோணமலைக்குத் திரும்பும் என்றும்—

அங்கிருந்து அது கொழும்பு செல்லும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## வீரப்பனைப் பிடிக்க இராணுவம் அழைப்பு?

### ஜெயலலிதா ஆலோசனை

சந்தனக் கடத்தல்காரன் வீரப்பனையும் அவனது சகாக்களையும் பிடிப்பதற்கு இராணுவத்தின் உதவியை நாடுவது குறித்தும் ஆலோசிக்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

வீரப்பனைப் பிடிக்க கர்நாடக அரசுடன் தமிழக அரசு கூட்டு முயற்சி ஒன்றை எடுப்பது பற்றியும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்த விடயங்கள் சம்பந்தமாக விரைவில் சென்னையில் கர்நாடக அரசு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவுள்ளதாகவும் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில்—

வீரப்பனை கைதுசெய்யும் முயற்சியில் ஈடுபட்டு, கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று மலரஞ்சலி செலுத்தினார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்து சேலம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருப்போரையும் அவர் நேற்று பார்வையிட்டு ஆறுதல் கூறினார். (ஒ)

## இடம்பெயர்ந்த ஆசிரியருக்கு மே முதல் இடமாற்றம்!

வடக்கு-கிழக்கு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து ஏனைய பகுதிப் பாடசாலைகளில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்களுக்கு அவ்வப் பகுதிகளுக்கு அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் இடமாற்றம் வழங்க கல்விச் சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்து இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கொழும்பு பத்திரிகை ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது. (த-எ)

### தொழில் நுட்பக் கல்லூரியில்

## வர்த்தக டிப்ளோமா பயிற்சி தொடர்ந்து கற்பிக்கப்படும்

யாழ்ப்பாணம் ஏப். 11

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் தேசிய உயர் வர்த்தக டிப்ளோமா பயிற்சி நெறியை தொடர்ந்து கற்பிக்க அனுமதி கிடைத்துள்ளது.

தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெற்று வந்த இப் பயிற்சி நெறியில் [illegible] வருடத்துக்கான பாடத்திட்டத்தில், கம்பியூட்டர் பயிற்சி நெறியும் சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து, கம்பியூட்டர் வசதி இல்லாததால் இப் பயிற்சி நெறி நிறுத்தப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது இந்த நெறிக்குத் தேவைப்படும் கம்பியூட்டர்களை விரைவில் அனுப்பி வைக்க தொழில் நுட்பக் கல்லூரிகளின் [illegible] பாளர் [illegible] உறுதியளித்துள்ளார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## என்றும் நீர் என்னுடன்

வாழ்க்கையின் சக்கரம் சுழன்ற போதும்
வசந்தங்கள் தொடர்ந்தும் மறைந்த போதும்
உலகமே மறந்தென்னை வெறுத்த போதும்
உயிர்த்த யேசுவே என்றும் நீர் என்னுடன்.

விலையுயர்வினால் உணவையே மறந்த போதும்
வீட்டில் அனைவரும் உணவின்றி இருந்த போதும்
உண்ணாமல் ஊன் உடல் இருந்த போதும்
உயிர்த்த யேசுவே என்றும் நீர் என்னுடன்.

நோவுடன் நான் இருந்த போதும்
நோயினால் உடல் நலிந்த போதும்
உலகமே கசந்து போன போதும்
உயிர்த்த யேசுவே என்றும் நீர் என்னுடன்

ஆபத்து என்னை சூழ்ந்த போதும்
'ஆ! உயிர் போனதோ' என்ற போதும்
உயிரை நினைத்து நான் பயந்த போதும்
உயிர்த்த யேசுவே என்றும் நீர் என்னுடன்.

வாழ்க்கையில் கவலை வந்த போதும்
வாழ்வையே பசிபிணி தின்ற போதும்
உறுதியுடன் வாழ்வை நான் நடத்துவதால்
உயிர்த்த யேசுவே என்றும் நீர் என்னுடன்.

செல்வன் சூ மொன்ரினி,
யாழ். பலகலைக்கழகம்.

(நன்றி; பாதுகாவலன்)

## யாழ்-வன்னி தகவல்தொடர்பு சேவை நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 11

நெருக்கடிகால யாழ் — வன்னி தொடர்பு சேவை யாழ். நகரில் நேற்று சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் ஓர் அங்கமாக செயற்படும் இத்தொடர்பு சேவையின் யாழ் அலுவலகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வெளியூர்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட தந்திகள் விநியோகிக்கப்பட்டன.

இந்த வைபவத்தில் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை —

மேற்படி வன்னி — யாழ். தொடர்பு சேவையின் கிளிநொச்சி அலுவலகமும் நேற்று கரடிப் போக்குச் சந்திக்கு அண்மையில் உள்ள கட்டடத்தில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது. (உ-5)

### செஞ்சிலுவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டர்களும் சர்வதேச சட்ட விதிகளுக்கு அமைய வாகனத்தை விட்டு இறங்கி நின்றனர்.

தமது உடைகளுக்கு மேல் செஞ்சிலுவை அங்கியை ("ஜாக்கெட்டை") அணிந்து, வாகனத்தை விட்டு விலகி, விமானத்தில் இருப்பவர்களுக்கு நன்கு தெரியக்கூடிய வகையில் அவர்கள் இறங்கி நின்றனர். அவர்களுக்குச் சற்றுத் தள்ளி, செஞ்சிலுவை வாகனம் செஞ்சிலுவைக் கொடியுடன் நின்றது.

செஞ்சிலுவைத் தொண்டர்கள் தமது வாகனத்துடன் நிற்பது தெளிவாகத் தெரிந்த பின்னரும் புக்காரா விமானம் அவர்களை நோக்கித் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

#### வாகனத்தையும் துளைத்தது

புக்காராவிலிருந்து தீர்க்கப்பட்ட வேட்டினால் செஞ்சிலுவைவாகனம் சேதமடைந்தது மற்றொரு வேட்டு திரு புவனேந்திரனின் தலையைத் துளைத்துச் சென்றது.

இச்சம்பவத்தின்போது இவருடன் கூடச் சென்ற செஞ்சிலுவைத் தொண்டர்கள் காயம் எதுவும் இன்றித் தெய்வாதீனமாகத் தப்பினர்.

#### புதிய அம்புலன்ஸ்

வான் தாக்குதலுக்கு இலக்கான செஞ்சிலுவைச் சங்கத்தின் அம்புலன்ஸ் கடந்த வாரம் தான் 'குமண' கப்பல் மூலம் இங்கு எடுத்துவரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

#### மக்கள் அஞ்சலிக்கு

தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் உபதலைவரான திரு. புவனேந்திரன் யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடி சன்மார்க்க மகா வித்தியாலயத்தின் ஆசிரியராவார் அண்மைக் காலத்தில் செஞ்சிலுவைச் சங்கத்தின் பல்வேறு நடவடிக்கைகளில் முன்னின்று உழைத்தவர்

அவரின் பூதவுடல் இன்று முற்பகல் யாழ்ப்பாணம் கண்டி வீதியில் உள்ள செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் தலைமையலுவலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

இராணுவத்தினரின் தாக்குதலில் சிக்கி தமது சங்கத்தின் உபதலைவர் உயிரிழந்த செய்தியை கொழும்பிலுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தலைமையகத்துக்கு தாங்கள் அறிவித்திருப்பதாக யாழ். கிளை அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-5-15-11-162)

## மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஏப். 11

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்டங்களை ஒட்டி வடமாகாண ரீதியாக நடத்தப்பட்டு வரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டங்கள் நாளை அரியாலை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும்.

காலை 8.30 மணிக்கு நடைபெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் அரியாலை யுத் "ஏ" அணியை எதிர்த்து ஸ்ரான்லி அணி மோதும்.

அடுத்து நடைபெறும் மற்றைய அரையிறுதியாட்டத்தில் அரியாலை யுத் 'பீ' அணியை எதிர்த்து கொக்குவில் வளர்மதி அணி மோதும்.

அரையிறுதியாட்டங்களில் வெற்றி பெறும் அணிகள் நாளை மறுதினம் காலை 10.30 மணிக்கு நடைபெறும் இறுதியாட்டத்தில் பங்கு பற்றும். (உ)

## சிரச்சேதம்

ரியாத், ஏப். 11

போதைவஸ்துக் குற்றங்களுக்காக இரு பாகிஸ்தானியர்களும் சவூதி பிரஜை ஒருத்தரும் சவூதி அரேபியாவில் நேற்று முன்தினம் சிரச்சேதம் செய்யப்பட்டனர் (த-எ)

### யாழ். புதிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் — யாழ் மாநகரசபையின் அங்கீகாரத்துடன் பயணிகளுக்கான உணவுச்சாலை, சுங்குமிட, மலசல கூட வசதிகளும் புதிய பஸ்நிலையப் பகுதியில் செய்யப்படும் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

யாழ் நகரை நோக்கி வரும் பயணிகள் வாகனங்கள் புதிய பஸ்நிலையப் பகுதியை அடைய வேண்டிய வீதிகள் மற்றும் விவரங்கள் பின்னர் வெளியிடப்படும்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகமும் யாழ் மாநகரசபையும் இணைந்து மேற்கொண்டுள்ள யாழ். நகர நிர்மாணத் திட்டத்தின் கீழ் ஓர் நடவடிக்கையாக பஸ்நிலைய இடமாற்றம் அமைகின்றது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாட்டு வண்டில் சவாரி
## போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் நியூ லலிதா ஜுவலறி ஆதரவில்
புத்தூர் வீனஸ் வி. கவின் ஏற்பாட்டில்
ஆவரங்கால் சவாரி மைதானத்தில்
இன்று நடைபெறவிருந்த
மாட்டு வண்டில்சவாரி போட்டி
13 ஆம்திகதி (செவ்வாய்க்கிழமை)
பி. ப. 2மணிக்கு நடைபெறும்.

[25211]



## புற்று நோயாளர் விடுதி
### வடமாகாண புற்று நோய் தடுப்புச் சங்கம்

விரைவில் புற்று நோயாளர் விடுதி திறக்கப்படவிருக்கிறது. புற்று நோயினால் பீடிக்கப்பட்டு உதவி அற்ற நிலையில் இருக்கும் நோயாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விவரங்களுக்கு:

விடுதி முகாமையாளர்
228, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(சி-4818)



## உடன் விற்பனைக்குண்டு

பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் உடன் விற்பனைக்குண்டு.

மல்லிகாபதி,
சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்.

(6113)


## மரண அறிவித்தல்கள்

### கந்தையா புவனேந்திரன்

(ஆசிரியர், யாழ். சன்மார்க்க வித்தியாலயம், உபதலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்' யாழ். கிளைத் தலைமையகம்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடம் இல. 91/5, இந்து மகளிர் ஒழுங்கையை வசிப்பிடமாக கொண்டவருமான திரு. கந்தையா புவனேந்திரன் அவர்கள் 10-04-93 அன்று அகால மரணமானார். அன்னார் இராஜகுமாரியின் (இலங்கை வங்கி, ஆஸ்பத்திரி வீதி கிளை, யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் ஸ்ரீஜீவனி (மாணவி வேம்படி மகளிர் கல்லூரி), சஜானனி ஆகியோரின் அருமைத் தந்தையும், எஸ். ஆர். கந்தையா, (ஓய்வுபெற்ற ஆசிரியர்), இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், ஞானேந்திரன் (சவுதி), காலஞ்சென்ற சுரேந்திரன், திருமதி வசந்தி சிவதாசன் (ஆசிரியை, யாழ். கொக்குவில் இராமகிருஷ்ணா), சுமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சி. ச. நடராசா, காமாட்சி அம்மாள் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மருமகனும், வைத்திய கலாநிதி இராஜகுமாரன் (இங்கிலாந்து), ஜெயகுமாரன், திருமதி சி. ஜெயகுமாரி (அமெரிக்கா), யோககுமாரன் (அமெரிக்கா), யோககுமாரி (ஜேர்மனி), திரு. சிவதாசன் (தொழில் நுட்ப உத்தியோகத்தர், மன்னார்), திருமதி ஞா. கருணாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11-04-93) மாலை 3.00 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி
திருமதி இ. புவனேந்திரன்
இலங்கை வங்கி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

91/5 இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (C/4826)

### திருமதி மாரிமுத்து ஐயம்பிள்ளை

புங்குடுதீவு 8ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சுன்னாகத்தில் வசித்தவருமான காலஞ்சென்ற ஐயம்பிள்ளையின் அன்பு மனைவி மாரிமுத்து 10 4-93இல காலமானார்.

அன்னார் ஞானம்மா, பொன்னம்மா, செல்லம்மா, வள்ளியம்மை, இராசம்மா, நாகனாதி, காலஞ்சென்ற நாகராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகரத்தினம், காலஞ்சென்ற சுப்பிரமணியம், குலசேகரம், தருமலிங்கம், செல்லம்மா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, பசுபதிப்பிள்ளை, தம்பிப்பிள்ளை, காலஞ்சென்ற சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று 11-4-93 பிற்பகல் 2 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
கு கனகசுந்தரம் (பேரன்)

மாணிக்கத்தியாகராய பண்டிதர் வீதி,
சுன்னாகம்.
(வாழைக்குலை சந்தை அருகாமை) (25208)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11 - 04 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆறு வலயங்களாக வகுத்து

# யாழ்ப்பாண நகரை திட்டமிட்டு புதுவடிவில் அமைக்க முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 11

திட்டமிடப்படாத நகர அமைப்பைக் கொண்டதாகவும், போர் அழிவுகளுக்கு உள்ளாகி சேதமுற்றதாகவும் இருக்கும் யாழ். நகரை ஒரு நீண்டகாலத் திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்ட வகையில் புனரமைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கான செயற்திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டிருக்கிறது.

அதன்படி வர்த்தக வலயம், குடிசன வலயம், நிர்வாகவலயம் கைத்தொழில் வலயம், கலாசார வலயம், பொழுதுபோக்கு வலயம் என்ற ஆறு பெரும் வலயங்களாக யாழ். நகரை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

நகர நிர்மாணத் திட்டத்தின் கீழ் நகரில் உள்ள ஆரியகுளம் உட்பட பல குளங்களை சுத்திகரித்து அழகுற அமைப்பதற்கும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

பஸ்நிலையம் புதிய இடத்துக்கு மாற்றப்பட்டதும் அது முன்னர் இயங்கிய யாழ். நகரின் மத்திய பகுதியில் அழகிய மரத்தோப்பு ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

'கொங்கிறீட்' கட்டடங்களால் சூழப்பட்ட அந்தப் பகுதியின் உஷ்ணத்தைப் போக்கவும், சூழல் சமநிலையைப் பேணவும் அந்த இடத்தில் மரங்கள் வளர்க்கப்படவுள்ளன.

கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் இத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

இந்த மாநாட்டில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகத் துணைப் பொறுப்பாளர் திரு. ஜவான், உள்ளூராட்சிப் பகுதி பொது நிர்வாகத் தொடர்பாளர் திரு. மா. பாபு, யாழ். மாநகரசபையைச் சேர்ந்த கட்டடக் கலைஞர் திரு. ஜெயலிங்கம், பொறியியலாளர் திரு. மா. ராமதாஸ், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக உள்கட்டுமானப் பகுதியைச் சேர்ந்த திரு சி. ரவிராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். (உ-5)

## சாரணருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 11

மறைந்த செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் உபதலைவரின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினரையும், — யாழ். காங்கேசன்துறை பிரிவு சாரணர்கள், திரிசாரணர்கள் அனைவரையும் சீருடையில் இன்று பிற்பகல் 1-30 மணிக்கு மறைந்த செஞ்சிலுவைச் சங்க உபதலைவரின் கந்தர்மட இல்லத்தில் கூடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரியின் சாரணர்கள், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினர் அனைவரும் இன்று காலை 7 மணிக்கு சீருடையில் கல்லூரிக்கு சமுகம் தருமாறு அதிபர் அறிவித்துள்ளார். (உ-5)

## இன்று ஈஸ்டர்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களிலும் இன்று விசேட உயிர்த்தெழுந்த ஞாயிறு ஆராதனைகள் இடம்பெறுகின்றன. (அ-30)

## இடைக்காட்டில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

2 ஹெலிகள் மற்றும் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் என்பனவும் தாக்குதல்களை நடத்தின.

பலாலி இராணுவத் தளத்தில் இருந்தும் கடும் ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இரண்டு கிலோ மீற்றர் தூரம் முன்னேறிய படையினரை எதிர்த்து 6 மணி நேரமாக விடுதலைப் புலிகள் மோதினர். இதனால் படையினரின் முன்னேற்ற முயற்சி கைவிடப்பட்டது.

நண்பகல் 12.30 மணியளவில் படையினர் தமது முன்னேறும் முயற்சியைக் கைவிட்டு பலத்த இழப்புகளுடன் பின்வாங்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பின்வாங்கும் வேளை படையினர் வல்லைப் பாலத்தை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடத்தினர். இதனால் வல்லைப் பாலம் சேதமடைந்தது.

இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் நீலவண்ணன் அல்லது இம்ரான் (அருளையா செந்தில்ராஜ் — சுதுமலை வீதி, மானிப்பாய்) என்ற போராளி வீரச்சாவடைந்தார்.

இந்நடவடிக்கைகளின் போது படையினர் தரப்பில் பேரிழப்பு ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது.

எனினும் படையினர் தரப்பில் ஏற்பட்ட இழப்புகள் பற்றிய விவரங்கள் எதுவும் இராணுவ வட்டாரங்களில் இருந்து நேற்றிரவு வரை வெளியிடப்படவில்லை.

நேற்று படையினரின் தாக்குதலினால் வல்லைப் பாலத்தில் ஒருவர் உயிரிழந்தார்; செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் கடமையிலிருந்தபோது பலியானார்; கம்பர்மலையில் பாடசாலை மாணவன் ஒருவன் ஷெல்லுக்கு இரையானான்.

(உ-5-11-15--17-87-118-155-162)

## வர்த்தக...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யைத் தொடர்ந்து இப்பயிற்சி நெறி விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

இரண்டாம் வருடத்தில் இருந்து கம்பியூட்டர் பயிற்சி நெறியை ஆரம்பிக்கலாம் என்றும் பணிப்பாளர் அறி[illegible] பக் கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்தன. (த-3)

## பொருள்கள் நேற்றும் இறக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஏப். 11

வலி வடக்கில் நேற்று இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்ற போதிலும் பருத்தித்துறையில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்று வழமை போல் இடம்பெற்றன.

பருத்தித்துறையில் இருந்து பொருள்களை ஏற்றிக்கொண்டு ப. நோ. கூ. சங்க லொறிகள், கொடிகாமம்— சாவகச்சேரி பகுதியூடாக யாழ். நகருக்கு வந்தன. (உ-3-5)

## பரீட்சையை தள்ளிப் போட விமானக் கடத்தல்

புதுடில்லி, ஏப். 11

தாங்கள் தோற்றவேண்டிய பரீட்சையை பின்போடும்படி கோரி, விமானம் ஒன்றைக் கடத்திய நான்கு மாணவர்கள் விமானப் பயணிகளினால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

உத்தரப் பிரதேசத் தலைநகர் லக்னோவிலிருந்து புதுடில்லி நோக்கிச் சென்று கொண்டிருந்த விமானமே விமானக் கடத்தலை அடுத்து மீண்டும் லக்னோவுக்கு திசை திருப்பப்பட்டு அங்கு தரையிறக்கப்பட்டது.

எனினும் பின்னர் அந்த மாணவர்களை பயணிகள் மடக்கிப் பிடித்து பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். (உ-6)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

## பிறிதின்னுயிர் காத்துத் தன்னுயிர் நீத்த தொண்டன்

### உயர்திரு. க. புவனேந்திரன் அவர்கள்
உபதலைவர்



10—04—93 சனிக்கிழமை அச்சுவேலியில் ஏற்பட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதல் உதவியளிக்க விரைந்த செஞ்சிலுவைத் தொண்டர் குழாமுக்கு தலைமை தாங்கிச் சென்ற எமது உபதலைவர் உயர்திரு. க. புவனேந்திரன் அவர்கள் சடுதியாக ஏற்பட்ட அனர்த்தம் காரணமாகக் காயமடைந்து தன்னுயிர் நீத்தார் என்பதை அனைவருக்கும் ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகின்றோம்.

இவரின் புகழுடல் இன்று (11-04-93) ஞாயிறு காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைத் தலைமையலுவலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அஞ்சலியில் அனைத்து அலகு, பிரிவு அங்கத்தவர் அனைவரையும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்கள் அனைவரும் 11-04-93 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ். கிளைத் தலைமையலுவலகத்தில் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளையினர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
10—04—93 (சி/4827)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org